


# காலம் வென்ற மூத்த தமிழ் அறிஞர் முனைவர் ந. சுப்பு ரெட்டியார் நூற்றாண்டு விழா

**[Aug 2015 – Aug 2016]**

## நூற்றாண்டுத் துவக்க விழா 27.08.2015 (பெரகம்பி)

காலம் வென்ற மூத்த தமிழ் அறிஞர் டாக்டர். ந. சுப்பு ரெட்டியார் நூற்றாண்டுத் துவக்க விழா இன்று 2015 ஆகஸ்ட் 27ஆம் நாள் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், பெரகம்பி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளியில் நடைபெற்றது.

துவக்க விழா நிகழ்விற்கு ஓய்வு பெற்ற பேராசிரியர் **திரு.ஆர்.பாலகிருஷ்ணன்** அவர்கள் தலைமை தாங்கி நூற்றாண்டு விழாவை தொடங்கிவைத்தார். சிறப்பு விருந்தினராக பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் கல்விக் குழுமங்களின் தலைவர் கல்வித் தந்தை **திரு.அ.சீனிவாசன்** அவர்கள் கலந்து கொண்டு பேராசிரியர் டாக்டர்.ந.சுப்பு ரெட்டியார் அவர்களின் திருவுருவப்படத்தை திறந்து வைத்தார். திருச்சி காவேரி மருத்தவமனை நிர்வாக இயக்குனர் பொறியாளர் **திரு.செல்வராஜ்** அவர்களும் செயல் இயக்குநர் மருத்துவர்.**திரு.செங்குட்டுவன்** அவர்களும் கலந்து கொண்டு நூற்றாண்டு விழா தொடர்பாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கினார்கள். பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் கல்வி குழுமங்களின் செயலர் **திரு.நீல்ராஜ்** அவர்கள் கலந்து கொண்டு பேராசிரியரின் சிறப்பியல்புகளை மாணவர்களுக்கு எடுத்துக் கூறி பெரகம்பி கிராமத்தில் இருந்து தங்கள் கல்வி நிறுவனத்திற்கு வரும் மாணவ / மாணவிகளுக்கு கல்லூரி சேர்க்கையில் முன்னுரிமை வழங்கப்பெறும் என தெரிவித்தார்.



திருமதி.பிரேமா இராமலிங்கம், திரு.ராஜகோபால், திரு.பாஸ்கர், திரு.துரைராஜ், திரு.சி.ரெங்கராஜன், திரு..P.N.சீனிவாசன், திரு.சி.பங்காருசாமி, திரு.கப்பல் தேவராஜ், திரு.சிவராமன், திரு.அஞ்சாநெஞ்சன், பெரகம்பி ஊராட்சித் தலைவி திருமதி அ.லோகேஸ்வரிஅஞ்சாநெஞ்சன் உட்பட பெரகம்பி கிராமத்தின் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

துவக்க விழாவை தொடர்ந்து நூற்றாண்டு முழுவதும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் போட்டிகள் மற்றும் கருத்தரங்கங்கள் போன்றவற்றை நடத்திட உள்ளதாக நூற்றாண்டு விழாவின் முதன்மை ஒருங்கிணைப்பாளர் முனைவர்.சு.இராமலிங்கம் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக திரு. R நடராஜன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இறுதியில், நூற்றாண்டு விழாக்குழுவின் திருச்சி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.சு.நாகேஷ் அவர்கள் நன்றி கூறினார்.

## திட்டமிடப்பெற்றுள்ள நிகழ்வுகள்

### நிகழ்வு 1: தமிழ் கட்டுரைப் போட்டி (12ஆம் வகுப்பு மாணவ / மாணவிகள் மட்டும்)

[Note: Only 10 students from each school]

தமிழ்நாடு முழுவதும் உள்ள 100 பள்ளிகளில் நடத்திட 100 தலைப்புகள் விழாக் குழுவினரால் ஏற்கனவே அறிவிக்கப்பெற்றுள்ளன. மாணவர்கள் தாங்களே குலுக்கல்முறையில் தேர்ந்தெடுக்கும் தலைப்பில் கட்டுரை எழுதலாம். சிறந்த முதல் 3 கட்டுரைகளுக்கு பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெறும். மற்றவர்களுக்கு பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்பெறும். பள்ளிகளுக்கு போட்டிகள் பற்றிய முழு விபரமும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பெறும். ஆகஸ்ட் 27 முதல் அக்டோபர் 31 க்குள் தங்களுக்கு உகந்த நாளில் கட்டுரைப் போட்டியை நடத்தி எங்களின் முகவரிக்கு அனுப்பி வைக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். தலைசிறந்த வல்லுநர் குழு கட்டுரைகளை மதிப்பீடு செய்யும். பள்ளிவாரியாக முதலிடம், இரண்டாமிடம், மூன்றாமிடம் தேர்வு செய்யப்பெற்று பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பெறும். <u>இந்த முதல் 100 கட்டுரைகளிலிருந்து மிகச்சிறந்த மூன்று கட்டுரைகள் தேர்தெடுக்கப்பெற்று, அம்மாணவர்களுக்கு, முறையே ரூ5000, ரூ3000 மற்றும் ரூ2000 வழங்கப்பெறும்.</u>

## நிகழ்வு 2: Online வினாடி வினாப் போட்டி




மார்ச் 2016-ல் தேர்வெழுதும் 12ஆம் வகுப்பு மாணவ / மாணவிகள் அனைவரும் கலந்து கொள்ளலாம். 2 கட்டங்களில் போட்டிகள் நடத்தப்பெற்று வெற்றி பெற்றவர்கள் தேர்ந்தெடுக்கப்பெறுவார்கள்.

## நிகழ்வு 3: சிறந்த ஆசிரியர்களுக்கான விருதுகள் (முதுகலை ஆசிரியர்கள் மட்டும்)




கட்டுரைப் போட்டிக்கு தேர்வு செய்யப்பட்ட மேற்படி 100 பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களில் இருந்து மாநில அளவில் பாடவாரியாக ஒரு முதுகலை ஆசிரியரையும், ஒரு தலைமையாசிரியரையும் தேர்ந்தெடுத்து பாராட்டுதல் நிகழ்வும் நடைபெற உள்ளது. மேற்படி நிகழ்வுக்கு ஆசிரியர்கள் நேரடியாக மின்னஞ்சல மூலமாக சுய விபரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். (தமிழ்-1, ஆங்கிலம்-1, கணிதம்-1, இயற்பியல்-1, வேதியியல்-1, உயிரியல்-1, கணினி அறிவியல்-1, கணக்குப்பதிவியல்/வணிகவியல்-1, பிறபாடங்கள்-1 மற்றும் தலைமையாசிரியர்-1 ஆக மொத்தம் 10 பேருக்கு தலா ரூ5000 பரிசும் சாதனைச் சான்றிதழும் வழங்கப்பெறும்).

## நிகழ்வு 4: முதல் தலைமுறை பெண் மாணவிக்கு பரிசு

மார்ச் 2016-ல் தேர்வெழுதும் தேர்வு செய்யப்பட்ட 100 பள்ளிகளில் பயிலும் 12ஆம் வகுப்பு மாணவிகளில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெறும் முதல் தலைமுறை மாணவியைப் பாராட்டி ரூ.**25000.00** ரொக்கப்பரிசு வழங்குதல்.

## நிகழ்வு 5: முன்னாள் குடியரசுத் தலைவர் பாரத இரத்னா Dr S இராதாகிருஷ்ணன் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு (ஆசிரியர் தின விழா) போட்டிகள்

முன்னாள் குடியரசுத் தலைவர் பாரத இரத்னா Dr **S** இராதாகிருஷ்ணன் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு (5 செப்டம்பர் 2015 - ஆசிரியர் தின விழா) திருச்சி மாவட்டம் புத்தனாம்பட்டி நேரு மேல்நிலைப்பள்ளியில் போட்டிகள் நடத்தப்பெற்று பரிசுகள் வழங்கப்பெற உள்ளன.

## நிகழ்வு 6: முன்னாள் குடியரசுத் தலைவர் பாரத இரத்னா Dr APJ அப்துல் கலாம் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு போட்டிகள்

முன்னாள் குடியரசுத் தலைவர் பேராசிரியர் **APJ** அப்துல்கலாம் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு (15 அக்டோபர் 2015) திருச்சி மாவட்டத்தில் பேராசிரியர் ந.சுப்பு ரெட்டியார் அவர்கள் பயின்ற கீழ்கண்ட பள்ளிகளில் போட்டிகள் நடத்தப்பெற்று பரிசுகள் வழங்கப்பெற உள்ளன.

**1.முசிறி அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி**
**2.கோட்டாத்தூர் அரசு உயர் நிலைப்பள்ளி**
**3.துறையூர் ஜெமிந்தார் உயர் நிலைப்பள்ளி**

## நிகழ்வு 7: கீழ்கண்ட பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு ஆளுமை வளர்ச்சி (Personality Development) குறித்து பயிற்சி நடத்துதல்

**1.முசிறி அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி**
**2.தாளக்குடி அரசு உயர் நிலைப்பள்ளி**
**3.மூவானூர் அரசு மேல் நிலைப்பள்ளி**

## நிகழ்வு 8: உலகத்தரச் சான்றிதழ் (ISO Certification)

பேராசிரியர் ந.சுப்பு ரெட்டியார் அவர்கள் பயின்ற **துறையூர் ஜெமிந்தார் உயர் நிலைப்பள்ளி**க்கு உலகத்தரச் சான்றிதழ் (ISO Certification) பெறுவது குறித்த நடவடிக்கைகள்.

## நிகழ்வு 9: சிறுகதைப் போட்டி

தரம் வாய்ந்த இலக்கிய மாத இதழ் **அமுதசுரபி** வாயிலாக சிறுகதைப் போட்டி அறிவித்தல்.

மற்றும் பல நிகழ்வுகள் நூற்றாண்டு முழுவதும் தொடர்ந்து நடைபெற உள்ளன.

nasubbureddiar100@gmail.com; nageshbww@gmail.com & www.nasubbureddiar100.in